பிறகு இடுப்பில் இருக்கிற ஈர வேஷ்டியை கீழே நழுவவிடவும். பிறகு மடிவேஷ்டியை வடக்கு/மேற்கு முகமாக நின்று கீழ்க்கண்ட மந்திரங்களைச் சொல்லி பஞ்சகச்சம் கட்டிக் கொள்ளவும்.

आवहन्ती वितन्वाना। कुर्वाणाचीरमात्मनः।

वासाꣳसिममगावश्च। अन्नपानेच सर्वदा॥

பிறகு மேற்கு முகமாக நின்று கால்களை அலம்பிக் கொண்டு கிழக்கு முகமாக இரண்டு தடவை ஆசமனம் செய்யவும். பிறகு எடுத்த இடுப்பு ஈர வேஷ்டியை நான்காக மடித்துக் கொண்டு கிழக்கு முகமாக நுனியின் வழியாக பூமியில் ஜலம் விழும்படி கீழ்க்கண்ட ச்லோகத்தைச் சொல்லி வேஷ்டியை பிழிய வேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

उच्छिष्टभागिनो दासाः ये मृतास्तेत्वमन्त्रकाः।
तृप्यन्तु तरुतां याताः मम सम्बन्धिनो नराः॥

இரு தடவை ஆசமனம்.

பிறகு விபூதியை எடுக்க கீழ்க்கண்ட மந்திரங்களை கிழக்கு முகமாக சொல்லவும்.

புண்ட்ரதாரணம்

सद्योजातं प्रपद्यामि सद्योजाताय वै नमो नमः।
भवेभवे नातिभवे भवस्व माम्। भवोद्भवाय नमः॥

वामदेवाय नमो ज्येष्ठाय नमः श्रेष्ठाय नमो रुद्राय नमः कालाय नमः कलविकरणाय नमो बलविकरणाय नमो बलाय नमो बलप्रमथनाय नमस्सर्वभूतदमनाय नमो मनोन्मनाय नमः॥

अघोरेभ्योऽथ घोरेभ्यो घोरघोरतरेभ्यः।
सर्वेभ्यस्सर्वशर्वेभ्यो नमस्ते अस्तु रुद्ररूपेभ्यः॥

तत्पुरुषाय विद्महे महादेवाय धीमहि तन्नो रुद्रः प्रचोदयात्॥

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ईशानस्सर्वविद्यानामीश्वरस्सर्वभूतानां ब्रह्माऽ-धिपति ब्रह्मणोऽधिपतिर्ब्रह्मा शिवोमे अस्तु सदाशिवोम्।

பிறகு விபூதியைப் பார்த்து,

अग्निरिति भस्म, वायुरिति भस्म, जलमिति भस्म, स्थलमिति भस्म, व्योमेति भस्म, सर्वंꣳहवै भस्म, मन इत्येतानि चक्षुंꣳषि भस्मनि॥

பிறகு விபூதியை கீழ்க்கண்ட மந்திரங்களைச் சொல்லி இடது உள்ளங்கையில் வைத்து ஜலத்தை விட்டு குழைக்கவும்.

मानस्तोके तनये मान आयुषि मानोगोषु मानो अश्वेषुरीरिषः।

वीरान्मानो रुद्र भामितोवधीर्हविष्मन्तो नमसाविधेम ते॥

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

त्र्यायुषं जमदग्नेः कश्यपस्य त्र्यायुषं।
यद्देवानां त्र्यायुषं तन्मे अस्तु त्र्यायुषम् ॥
त्र्यम्बकं यजामहे सुगन्धिं पुष्टिवर्धनम् ।
उर्वारुकमिव बन्धनान्मृत्योर्मुक्षीय माऽमृतात् ॥

நெற்றி, மார்ப்பு, தோள்பட்டைகள், கை மணிகட்டுகள். இந்த இடங்களில் நடு மூன்று விரல்களால் குழைந்த விபூதியை இட்டுக் கொள்ள வேண்டும். ஆசமனம்.

குறிப்பு:- க்ரஹஸ்தனுக்கு ப்ராதஸ்நானமும், மாத்யாஹ்னிக ஸ்நாநமும் விதிக்கப்பட்டுள்ளது. மாத்யாஹ்னிக ஸ்நானம் செய்த பிறகு இடுப்பு வேஷ்டியை மாத்யாஹ்னிகம், ப்ரஹ்மயக்ஞும், தர்ப்பணம் ஆகியவற்றை முடித்துவிட்டு காலை போலவே ச்லோகத்தை சொல்லி பிழிய வேண்டும். ச்ராத்தத்தினன்று ப்ரஹ்மயக்ஞும் தர்ப்பணம் செய்த பிறகு தான் இடுப்பு வேஷ்டியை பிழிய வேண்டும்.

முக்யமான மந்திரங்களுக்கு அர்த்தங்கள்

अतिक्रूर महाकाय कल्पान्तदहनोपम ।
भैरवाय नमस्तुभ्यं अनुज्ञां दातुमर्हसि ॥

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மிகவும் கொடூரமானவரே! பெரிய சரீரத்தை உடையவரே! ப்ரளய காலத்து ஜ்வாலைக்கு ஒப்பான பைரவரே உமக்கு நமஸ்காரம். எனக்கு அனுமதி கொடுப்பீராக.

दुर्भोजन दुरालाप दुष्प्रतिग्रह संभवम्।
पापं हर मम क्षिप्रं सह्यकन्ये नमोस्तुते॥
त्रिरात्रं जाह्नवी तीरे पञ्चरात्रं तु यामुने।
सद्यः पुनातुकावेरी पापं आमरणान्तिकम्॥
गङ्गा गङ्गेति यो ब्रूयात् योजनानां शतैरपि।
मुच्यते सर्व पापेभ्यः विष्णुलोकं स गच्छति॥

ஹே சஹ்ய மலையில் உண்டான காவேரியே! சாப்பிட கூடாதவற்றை சாப்பிடுதல், பேசக் கூடாத வார்த்தைகள் பேசுதல், வாங்கக் கூடாத ப்ரதிக்ரஹம் வாங்குதல் இவைகளால் ஏற்பட்ட என்னுடைய பாபத்தைச் சீக்கிரமாகவே போக்கடிப்பாயாக, உனக்கு நமஸ்காரம்.

கங்கை கரையில் மூன்று இரவும், யமுனைக் கரையில் ஐந்து இரவும் இருந்தால் அகலும் பாபமெல்லாம் காவேரி ஸ்நானம் செய்தவுடனேயே அகலுகிறது. எவனொருவன் கங்கை, கங்கை என்று 100

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

யோஜனைக்கும் (1000 மைலுக்கும்) அப்பால் இருந்து கொண்டும் கூடக் கூறுகிருஞே, அவன் எல்லா பாபத்திலிருந்தும் விடுபட்டு விஷ்ணு லோகத்தை அடைகிருன்.

आपोवा इदꣳसर्वं विश्वाभूतान्यापः प्राणावा आपः पशव आपोऽन्नमापोऽमृतमापस्सम्राडापो विराडापस्स्वराडापश्छन्दाꣳस्यापोज्योतीꣳष्यापो यजूꣳष्यापस्सत्यमापस्सर्वा देवता आपो भूर्भुवस्सुवराप ओम् ॥

உலகம் முழுவதும் ஜல வடிவமே, எல்லாப் பிராணிகளும் எல்லோருடைய உயிராயிருப்பதும், பசுக்களும், உணவுப் பொருளும் அமிர்தமும், ஹிரண்ய கர்பரான ப்ரஹ்மாவும், விராட்புருஷனும், ஈச்வரனும், காயத்ரி முதலிய சந்தஸ்ஸுகளும், ஜோதிஸ்ஸுகளும், யஜுர் மந்திரமும், உண்மையும், இந்திராதி முதலிய எல்லா தேவர்களும், பூலோகம், அந்தரிக்ஷ லோகம், ஸ்வர்க்க லோகம் மூன்றும், ஓங்கார பொருளான பரப்பரஹ்மமும் ஜல வடிவமே.

आपोहिष्ठा मयोभुवः। तान ऊर्जे दधातन। महेरणाय

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

चक्षसे। योवः शिवतमोरसः। तस्य भाजयतेहनः। उशतीरिव मातरः। तस्मा अरङ्गमाम वः। यस्य क्षयाय जिन्वथ। आपो जनयथाच नः॥

ஓ ஜல தேவதைகளே! நீங்கள் சுகத்தைக் கொடுப்பவர்கள். எங்களுக்கு அன்னத்தைக் கொடுங்கள். பெரிய அழகிய அறிவைக் கொடுங்கள். எங்களுக்கு இவ்வுலகில் சுகத்தைக் கொடுக்கக் கூடிய ஜலத்திலுள்ள உயர்ந்த ரஸத்தை அளியுங்கள். தாயார் எவ்வாறு தன்னுடைய குழந்தைகளுக்கு ரஸத்தைக் கொடுக்கிறாளோ அது போல் எங்களுக்கு உன்னுடைய ரஸத்தை அளிப்பாயாக. எந்த ரஸத்தால் (எங்களுடைய) கிருஹத்தில் ப்ரீதியை உண்டு பண்ணுகிறீர்களோ, எந்த ரஸத்தால் புத்ரன் முதலிய ப்ரஜைகளை எங்களுக்கு உண்டு பண்ணுகிறீர்களோ, அந்த ரஸத்தை நாங்கள் வேண்டிய அளவு அடைய வேண்டும்.

हिरण्यश्रृङ्गं वरुणं प्रपद्ये तीर्थं मे देहि याचितः। यन्मया भुक्तमसाधूनां पापेभ्यश्च प्रतिग्रहः॥

यन्मे मनसा वाचा कर्मणा वा दुष्कृतं कृतम्। तन्न

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

इन्द्रो वरुणो बृहस्पतिंसविता च पुनन्तु पुनः पुनः ॥

नमोऽग्नयेऽप्सुमते नम इन्द्राय नमो वरुणाय नमो वारुण्यै नमोद्भ्यः ॥

தங்கமயமான மகுடத்தை உடைய வருண தேவனை அடைகிறேன். என்னால் யாசிக்கப்பட்ட ஏ வருணனே எனக்கு தீர்த்தத்தை அளிப்பாயாக. மேலும் பாபிகள் வீட்டில் என்னால் எது சாப்பிடப்பட்டதோ, பாபிகளிடமிருந்து எந்த ப்ரதிக்ரஹம் வாங்கப் பட்டதோ, மனதினாலும், சொல்லினாலும், செயலாலும் எந்த கெட்ட காரியம் செய்யப்பட்டதோ, எல்லாவற்றையும், இந்திரன், வருணன், ப்ரஹஸ்பதி, ஸவிதா இந்த தேவர்கள் திரும்ப திரும்ப விடுவித்து சுத்தப்படுத்தட்டும்.

ஜலத்தோடு கூடிய அக்னிக்கு நமஸ்காரம். இந்திரனுக்கும், வருணனுக்கும், வருணனுடைய பத்னிக்கும், ஜலாபிமான தேவதைகளுக்கும் நமஸ்காரம்.

यदपां क्रूरं यदमेध्यं यदशान्तं तदप गच्छतात् ।

अत्याशनादतीपानाद्यच्च उग्रात्प्रतिग्रहात् ।

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0: In Public Domain. Muthulakshmi Research Academy

तन्नो वरुणो राजा पानिनां ह्यवमर्शतु ॥

ஜலத்தில் எது சுழல் போன்ற க்ரூரமான அம்சமோ, எது எச்சில் முதலியவற்றல் அசுத்தமானதோ, எது பித்தம், வாதம் முதலியவற்றை உண்டு பண்ணக் கூடிய அம்சமாக இருக்கின்றனவோ அவை எல்லாம் நீங்கட்டும். தேவ, ரிஷி, பித்ரு, மனிதர்களுக்குக் கொடுக்காமல் சாப்பிடுதல்.

(अत्याशनं) அதே மாதிரி தர்ப்பணம் செய்யாமல் தண்ணீரை பருகுவது (अतिपानं) உக்ர ப்ரதிக்ரஹம் வாங்குதல், இவைகளால் ஏற்பட்ட பாபத்தை ஜலாதிபதியான வருணன் தன் கையால் போக்கட்டும்.

सोऽहमपापो विरजो निर्मुक्तो मुक्तकिल्बिषः ।

नाकस्य पृष्ठमारुह्यगच्छेद्ब्रह्म सलोकताम् ॥

அப்படி போக்கப்பட்ட பாபமில்லாத நான் விருப்பு வெறுப்பிலிருந்து விடுபட்டவனாகவும், எல்லாப் பாபத்திலிருந்து விடுபட்டவனாக இருந்து கொண்டு ஸ்வர்க்க லோகத்தின் மேல் ஏறி ஹிரண்ய கர்ப ப்ரஹ்மாவுடன் சமானமான லோகத்தை அடையக் கடவேன்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

यश्चाप्सु वरुणः स पुनात्वघमर्षणः ॥

பாபத்தைப் போக்கக் கூடிய ஜலத்தின் அபிமானியான வருண தேவதை என்னைச் சுத்தம் செய்யட்டும்.

इमं मे गङ्गे यमुने सरस्वति शुतुद्रिस्तोमꣳसचता परुष्णिया।
असिक्निया मरुद्वृधे वितस्तयाऽऽर्जीकीये शृणुह्या
सुषोमया ॥

ஹே கங்கா தேவியே, யமுனையே, ஸரஸ்வதியே சதத்ருவே, ஆர்ஜீகீயே நதியே, மருத்வ்ருத நதியே (காவேரி) நீங்கள் எல்லோரும் என்னுடைய ஸ்தோத்ரரூபமான இந்த மந்திரத்தைக் கேட்டு, நீங்கள் பருஷ்ணீ நதியுடனும் அஸிக்னி நதியுடனும், விதஸ்தா நதியுடனும், ஸுஷோமா நதியுடனும் வாருங்கள்.

கருத்து :- மேற் சொன்ன நதிகள் நாம் ஸ்நாநம் செய்யும் ஜலத்தில் ஸாந்நித்யத்தை அடைந்து என்னுடைய பாபங்களை அகற்றிப் புனிதனாக ஆக்கட்டும்.

ऋतं च सत्यं चाभीद्धात्तपसोऽध्यजायत।
ततो रात्रिरजायत ततः समुद्रो अर्णवः ॥

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

समुद्रादर्णवादधि संवत्सरो अजायत।
अहोरात्राणि विदधद्विश्वस्य मिषतो वशी॥
सूर्याचन्द्रमसौ धाता यथा पूर्वमकल्पयत्।
दिवंच पृथिवीं चान्तरिक्षमथो सुवः॥

ப்ரகாச வடிவமான ப்ரஹ்மத்தினடமிருந்து, அவர் ஆலோசித்த பிறகு பஞ்ச பூதங்களும், 14 உலகங்களும் உண்டாயின. பிறகு இரவு, பகல், (ஏழு) ஸமுத்திரங்கள், குளம், குட்டை, கிணறுகள் உண்டாயிற்று. அதற்கு பிறகு விஞடி முதல் வருஷம் வரை எல்லா விதமான காலங்களும் உண்டாயிற்று. இந்த காலமே சராசர உலகத்தை வசப்படுத்துகிறது. ச்ருஷ்டி கர்த்தாவானவர்(ப்ரஹ்மா) ஸூரியன், சந்திரன், பூமி, வாயு லோகம், சுவர்க்க லோகம், முதலியவற்றையும் பூமிக்கு கீழ் உள்ள (ஏழு) லோகங்களையும் முன் கல்பத்தில் இருந்தபடியே உண்டு பண்ணிஞர்.

यत्पृथिव्याꣳरजः स्वमान्तरिक्षे विरोदसी।
इमाꣳस्तदापोवरुणः पुनात्वघमर्षणः॥

பூமியிலும், ஆகாசத்திலும், அந்தரிக்ஷ லோகத்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

திலும் எந்த பாபம் இருக்கிறதோ அவை எல்லா வற்றையும் கர்மானுஷ்டானம் செய்கிற எங்களை, பாபத்தை போக்கக் கூடிய வருணராஜா சுத்தம் செய்யட்டும்.

पुनन्तु वसवः पुनातु वरुणः पुनात्वघमर्षणः ।
एष भूतस्य मध्ये भुवनस्य गोप्ता
एष पुण्यकृताल्लोकानेषमृत्योर्हिरण्मयम् ।

அஷ்டவஸுக்களும், வருணனும், அகமர்ஷணர் என்ற ரிஷியும் சுத்தப்படுத்தட்டும், இந்த வருணராஜா தான் முக்காலத்திலுமுள்ள உலகங்களை, ரக்ஷிப்பவர். யாகாதிகளைச் செய்த புண்யசாலிகளுக்கு அவரவர் களுக்கு உரிய லோகங்களை அளிக்கிறார். எல்லாப் பிராணிகளுக்கும் ம்ருத்யு மற்றும் ஹிரண்மயம் என்ற உலகத்தை அளிக்கிறார்.

द्यावापृथिव्योर्हिरण्मयꣳसꣳश्रितꣳसुवः ।
सनः सुवः शꣳशिशाधि ॥

பிரம்மாண்ட வடிவமான ஸ்வர்க்க லோகம், பூமிக்கும் ஆகாசத்திற்கும் இடையில் சார்ந்து இருக்கிறது. ஹேவருண எங்களுக்கு அந்த ஸ்வர்க்க லோகத்தை அநுக்ரஹிப்பாயாக.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

आर्द्रं ज्वलति ज्योतिरहमस्मि। ज्योति र्ज्वलति ब्रह्माहमस्मि।

योऽहमस्मि ब्रह्माहमस्मि। अहमस्मि ब्रह्माहमस्मि।

अहमेवाहं मां जुहोमि स्वाहा।

இந்த ஜலம் அதிஷ்டான ப்ரஹ்மத்திஞல் பிரகாசிக்கிறது. அந்த அதிஷ்டான ஜோதி ஸ்வரூபமான ப்ரஹ்மமாக நான் இருக்கிறேன். ப்ரஹ்மம் தான் பிரகாசிக்கின்றது. நான் ப்ரஹ்மமாக இருக்கிறேன். ஜீவஞக இருந்த நான் ப்ரஹ்மமாகவே இருக்கிறேன். அஹங்காரத்திற்கு சாக்ஷியான ப்ரஹ்மமாக இருக்கிறேன். அப்படிப்பட்ட நான் ஜல வடிவமான என்ஊ அக்னியில் ஹோமம் செய்கிறேன்.

अकार्यकार्यवकीर्णी स्तेनो भ्रूणहा गुरुतल्पगः।

वरुणोऽपामघमर्षणस्तस्मात्पापात्प्रमुच्यते॥

சாஸ்திர நிஷித்தமான காரியத்தைச் செய்பவன். ஸ்த்ரீ ஸங்கமம் செய்த ப்ரஹ்மசாரீ, (தங்கத்தை) திருடியவன், கர்ப்பத்தை கலேத்தவன். வேதசாஸ்திரம் அறிந்தவஊக் கொன்றவன், குரு பத்னிகமனம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

செய்தவன் இவர்களின் பாபங்களை போக்கடிக்க வல்ல ஜலத்திற்கு தேவதையான வருணபகவான் மேற் சொன்ன பாபங்களிலிருந்து விடுவிக்கட்டும்.

पवमानस्सुवर्जनः। पवित्रेण विचर्षणिः। यः पोता पुनातु मा॥

எந்தத்தேவர் எல்லோரையும் சுத்தம் செய்கிருரோ அப்படிப்பட்ட சுத்தப்படுத்துவதில் கெட்டிக்காரரும், ஸ்வர்க்கத்தில் உண்டானவரும், சுத்தி செய்யும் அநேக முறைகளை அறிந்தவருமான தேவர், சுத்தி செய்வதற்குச் சாதனமான எங்களுடைய ஜபம், தியானம் முதலியவற்ருல் என்னைப் பரிசுத்தமாக ஆக்கட்டும்.

पुनन्तु मा देवजनाः। पुनन्तु मनवो धिया।
पुनन्तु विश्व आयवः।

சிருஷ்டி காலத்தில் ஸ்வர்க்கலோகத்தில் உண்டான தேவர்களும், ஸ்வாயம்பு போன்ற மநு முதலியவர்களும், மற்றும் தங்கள் கர்மாவின் பயனுக மனிதலோகத்திற்கு வந்திருக்கின்ற நல்லொக்கமுள்ள மனிதர்களும் அநுக்கிரஹம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு என்னை பரிசுத்தமாக்கட்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

जातवेदः पवित्रंवत्। पवित्रेण पुनाहि मा।

ஏ அக்னியே - தனது காந்தியால் ப்ரகாசிக்கிர வராக இருந்து கொண்டு நாங்கள் செய்ய வேண்டிய கர்மாக்களை அனுசரித்து எல்லாவற்றையும் பரிசுத்த மாக்கக் கூடிய உமது ஸங்கல்பத்தினுல் நாங்கள் அனுஷ்டித்த கர்மாக்களானது சுத்தியுடையதாக ஆகும்படி என்னைப் பரிசுத்தமாக்குக.

शुक्रेण देवदीद्यत्। अग्ने क्रत्वा क्रतूꣳरनु।

यत्ते पवित्रमर्चिषि। अग्ने विततमन्तरा। ब्रह्म तेन पुनीमहे।

ஹே அக்னியே! உன்னுடைய ஒளியின் நடுவில் விஸ்தாரமாக பரவி இருக்கிற சுத்தி செய்யக் கூடிய எந்தப் ப்ரஹ்மம் இருக்கிறதோ அதனுல் நாங்கள் பரிசுத்தமாக ஆகிருேம்.

उभाभ्यां देवसवितः। पवित्रेण सवेन च। इदं ब्रह्म पुनीमहे।

ஹே ஸவித்ரு தேவதையே. உன்னுடைய சுத்தி செய்யக் கூடிய தன்மை, கர்மானுஷ்டானங்களில் தூண்டுதல், இந்த இரண்டினுலேயும் விருத்தி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அடைந்த கர்மாவைச் சுத்தி செய்கிறோம்.

वैश्वदेवी पुनती देव्यागात्। यस्यै बह्वीस्तनुवो वीतपृष्ठाः। तया मदन्तः सधमाद्येषु।

वयंस्याम पतयो रयीणाम्।

எல்லாத்தேவர்களோடும் ஸம்பந்தப்பட்ட சுத்தி செய்வதில் ஸாமர்த்தியமுள்ள தேவியானவள் எங்களைச் சுத்தி செய்துகொண்டு இங்கு வரட்டும். எந்த தேவியினுடைய சுத்தி செய்யக் கூடிய சரீரங்கள் உள்ளதோ, அழகான ஸ்தோத்திரங்களை உடையதோ, அந்த தேவியினால் அனுக்ரஹிக்கப்பட்ட நாங்கள், ரித்விக்குகளுடன் சந்தோஷப்படக் கூடிய காரியங்களில் சந்தோஷத்தை அடைந்து நாங்கள் செல்வந்தர்களாக ஆவோம்.

वैश्वानरो रश्मिभिर्मा पुनातु। वातः प्राणेनेषिरो मयोभूः।

द्यावापृथिवी पयसा पयोभिः। ऋतावरी यज्ञिये मा पुनीताम्।

ஸூரியனே, வைச்வானர அக்னியோ என்னைத் தங்கள் கிரணங்களால் சுத்தப்படுத்தட்டும். வாயு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பகவான் ப்ராண வடிவில். எல்லோருடைய உள்ளத்தில் வியாபித்துக் கொண்டு சுகத்தைக் கொடுப்பவனாக ஆகட்டும். ஆகாயம், பூமி இரண்டும் உண்மையாக இருந்து கொண்டு யாகத்திற்கு நன்மை செய்பவர்களாக இருந்து கொண்டு ஜலத்தினாலும் பாலினாலும் என்னைப் பரிசுத்தம் பண்ணட்டும்.

बृहद्भिः सवितुस्तुभिः। वर्षिष्ठै र्देवमन्मभिः। अग्ने दक्षैः पुनाहि मा। येन देवा अपुनुत। येनापो दिव्यंकशः। तेन दिव्येन ब्रह्मणा। इदं ब्रह्म पुनीमहे।

ஹே ஸவித்ரு தேவதையே! மிகப் பெரியதாகவும், பாபத்தை போக்கக்கூடிய ஸாதனமாகவும், நன்று வளர்ந்ததும், சுத்தப்படுத்துவதற்கு ஸாமர்த்திய முள்ளதுமான அனுக்ரஹத்திற்கு விஷயமானவைகளால் என்னைப் பரிசுத்தி செய்வீராக. சுத்தி செய்யக் கூடிய எந்த ஸாதனத்தால் தேவர்கள் முன்காலத்து யஜமானர்களைச் சுத்தி செய்தனரோ, எந்த சுத்தி செய்யக் கூடிய ஸாதனத்தினால் ஜல தேவதைகள் தேவ லோக ஸம்பந்தப்பட்ட வழியை சுத்தி செய்தனரோ, தேவ லோகத்திற்குத் தகுந்த நன்கு வ்ருத்தி அடைந்த அந்த சுத்தி ஸாதனத்தினால் இந்த அநுஷ்டிக்கப்படுகின்ற பெரிய கர்மாவைச் சுத்தம் செய்கிறோம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

यः पावमानीरध्येति। ऋषिभिस्संभृतꣳरसम्।
सर्वꣳस पूतमश्नाति। स्वदितं मातरिश्वना।

எவன் சுத்தம் செய்யக் கூடிய பவமான ருக்குகளைஅத்யயனம் செய்கிருனே அவன் மந்த்ரார்த்தம் தெரிந்த முனிவர்களால் ஸம்பாதிக்கப்பட்ட ஸாரபூதமான பயனை அநுபவிக்கிருன். அந்தப் பயன் சுத்தமானதும், காற்றினுல் ருசி உள்ளதாக செய்யப் பட்டிருக்கிறது.

पावमानीर्यो अध्येति। ऋषिभिस्संभृतꣳरसम्।
तस्मै सरस्वती दुहे। क्षीरꣳसर्पिर्मधूदकम्।

பவமான ருக்குகளை எவன் அத்யயனம் செய்கிருனே அவனுக்கு ரிஷிகளால் சேர்த்துவைக்கப் பட்ட பால், நெய், நீர், போன்ற ரஸத்ரவ்யங்களை ஸரஸ்வதி கொடுக்கிருள்.

पावमानीस्स्वस्त्ययनीः। सुदुघाहि पयस्वतीः।
ऋषिभिस्संभृतो रसः। ब्राह्मणेष्वमृतꣳहितम्।

பவமான ருக்குகள் க்ஷேமத்தைக் கொடுக்கக் கூடியவை. நன்கு பயனை அளிக்கக் கூடிய பால் போன்ற ரஸத்ரவ்யங்களுக்கு காரணமானவை.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

(அவைகள் நம்மை அநுக்ரஹிக்கட்டும்) ரிஷிகளால் நம்மிடத்தில் ரஸமான வஸ்து சேர்த்து வைக்கப்பட்டதாக ஆகட்டும். வேதத்தைப் படிக்கும் ப்ராஹ்மணனிடத்தில் அழியாத நன்மையைச் சேர்த்து வைக்கட்டும்.

पावमानी र्दिशन्तु नः। इमं लोकमथो अमुम्।
कामान् समर्धयन्तु नः।

இந்திராதி தேவதைகளால் உருவாக்கப்பட்ட பவமான மந்த்ர அபிமான தேவதைகள், இந்த உலகத்தையும், ஸ்வர்க்கத்தையும் எங்களுக்கு கொடுக்கட்டும். இந்த இரண்டு லோகங்களிலும் உள்ள எங்களுக்கு விருப்பமான வஸ்துக்களை எங்கள் பொருட்டு நிறைந்ததாகச் செய்யுங்கள்.

देवी-र्देवैः समाभृताः। पावमानीस्स्वस्त्ययनीः।
सुदुघाहि घृतश्चुतः। ऋषिभिः संभृतो रसः।
ब्राह्मणेष्वमृतꣳहितम्।

பவமான மந்த்ர அபிமான தேவதைகள் க்ஷேமத்தை கொடுக்கக் கூடியவை. நெய் பெருக்கம் ஏற்படும்படி செய்யட்டும். ரிஷிகளும் சேர்க்கப்பட்ட ஸாரமான வஸ்து நம்மிடத்தில் இருக்கும்படி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

செய்யட்டும். அந்த மந்த்ரங்களைப் படிக்கின்ற ப்ராஹ்மணர்களிடத்தில் நன்மை நிலையாக இருக்கும் படி செய்யட்டும்.

येन॑ दे॒वाः प॒वित्रे॑ण। आत्मानं॑ पुन॒ते सदा॑। तेन॑ स॒हस्र॑धारेण। पा॒व॒मा॒न्यः पु॒नन्तु मा।

இந்திராதி தேவர்கள் எந்த பவித்ரமான மந்த்ரத்தினால் தன்னை எப்பொழுதும் சுத்தி செய்து கொள்ளுகிறார்களோ, அப்படிப்பட்ட பல மடங்கான உட்பிரிவுகளோடு கூடிய சுத்தி சாதனத்தால் பவமான ருக்குகள் என்னைப் பரிசுத்தமாக்கட்டும் (மந்த்ராபிமான தேவதைகள்).

प्रा॒जा॒प॒त्यं प॒वित्र॑म्। श॒तोद्या॑मꣳ हि॒र॒ण्मय॑म्। तेन॑ ब्रह्म॒ विदो॑ व॒यम्। पू॒तं ब्रह्म॑ पुनीमहे।

எந்த சுத்தி சாதனமானது ப்ரஜாபதி தேவதை ஸம்பந்தப்பட்டதாகவும், நூற்றுக் கணக்கான தருபங்களால் செய்யப்பட்டதும், பாபத்தை போக்கக்கூடிய ஹிரண்யத்தினால் செய்யப்பட்டுள்ளதோ, அந்த ஸாதனத்தினால் வேதத்தின் அர்த்தத்தை அறிந்த நாங்கள் ஏற்கனவே பரிசுத்தமான கர்மாவை மறுபடியும் சுத்தமாக்குகிறோம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

इन्द्रस्सुनीती सहमा पुनातु। सोमस्स्वस्त्या वरुणस्समीच्या।

यमो राजा प्रमृणाभिः पुनातु मा। जातवेदा मोर्जयन्त्या पुनातु।

இந்திரன் நல்ல பயனை அளிக்கக் கூடிய தேவியுடன் என்னைச் சுத்தம் செய்யட்டும். ஸோமன் க்ஷேமத்தைக் கொடுக்கக் கூடிய தேவியுடன் என்னை சுத்தமாக்கட்டும். வருணன் அநுகூலமான தேவியுடன் என்னை சுத்தமாக்கட்டும். யமதர்மராஜா சிறந்த முறையில் எல்லோரையும் (போக்கக்கூடிய) தேவிகளுடன் கூட என்னைச் சாந்தமாக்கட்டும். அக்னி பகவான் பால்போல ரஸவஸ்து அளிக்கக் கூடிய தேவியுடன் கூட என்னைப் பரிசுத்தமாக்கட்டும்.

द्रुपदादिव मुञ्चतु। द्रुपदा दिवेन्मुमुचानः। स्विन्नस्स्नात्वी मलादिव। पूतं पवित्रेणेवाज्यं। आपश्शुन्धन्तु मैनसः॥

தண்டனையைக் கொடுப்பதற்காக ஏற்படுத்தப் பட்ட ஆணி அடித்த கால் வைக்கும் கட்டையிலிருந்து

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

விடுபட்டவன் எவ்வாறு சுத்தமாகிருனோ, மேலும் வியர்வை உடையவன் ஸ்நாநம் செய்து அழுக்கி லிருந்து விடுபட்டு சுத்தமாகிருனோ, மேலும் நெய்யானது பரிசுத்தம் செய்யக் கூடிய பவித்ரத்திஞல் எவ்வாறு சுத்தமாகிறதோ அவ்வாறு இந்த ஜலங்கள் என்னை பாபத்திலிருந்து விடுவிக்கட்டும்.

तद्विष्णोः परमं पदꣳसदा पश्यन्ति सूरयः। दिवीव चक्षुराततम्।

எங்கும் பரவிய ஆகாசத்தில் கண்பார்வை செலுத்துவது போல் இருக்கின்ற, எங்கும் வியாபித்த விஷ்ணுவினுடைய உயர்ந்த அந்த ஸ்வரூபத்தை வேதாந்தத்தில் கரை கண்ட ஞானிகள் எப்பொழுதும் பார்க்கிருர்கள்.

तद्विप्रासो विपन्यवो जागृवाꣳसस्समिन्धते। विष्णोर्यत्परमं पदम्।

அப்பேர்பட்ட விஷ்ணுவினுடைய உத்தமமான ஸ்வரூபத்தை ப்ராஹ்மணர்கள் விழிப்புடன் இருந்து கொண்டு நன்கு ப்ரகாசப் படுத்துகிருர்கள்.

यन्मया दूषितं तोयं शरीर मलसञ्चयैः।

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

तद्दोषपरिहारार्थं यक्ष्माणं तर्पयाम्यहम् ॥

சரீரத்தின் அழுக்குகளால் ஜலம் என்னால் அசுத்த மாக்கப்பட்டது. அந்த பாபத்தை போக்கடிக்க யக்ஷ்ம தேவதைக்கு நான் தீர்த்த முகமாக த்ருப்தியை உண்டு பண்ணுகிறேன்.

लतावृक्षेषु गुल्मेषु वर्तन्ते पितरो मम।

तेषामाप्यायनार्थं तु इदमस्तु शिखोदकम् ॥

கொடிகளிலும், மரங்களிலும், புதர்களிலும் என் வம்சத்தைச் சேர்ந்த பித்ருக்கள் யார் இருக்கிறார்களோ, அவர்களின் திருப்திக்காக இந்தச் சிகையின் வழியாக விழும் ஜலம் இருக்கட்டும்.

ये केचास्मत्कुले जाता अपुत्रा गोत्रजा मृताः।

ते गृह्णन्तु मया दत्तं वस्त्रनिष्पीडनोदकम् ॥

எவர்கள் என்னுடைய குலத்தில் பிறந்து என் கோத்திரத்தில் சேர்ந்த சந்ததி இல்லாமலே இறந்து விட்டார்களோ, அவர்கள் என்னால் கொடுக்கப்பட்ட இந்த வஸ்திரத்தைப் பிழிவதினால் விழும் நீரை ஸ்வீகரித்துக் கொள்ளட்டும்.

शुचीवो हव्या मरुतश्शुचीनां। शुचिँ हिनोम्यध्वरं

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

शुचिभ्यः। ऋतेन सत्यमृतसाप आयन्। शुचिजन्मानः शुचयः पावकाः।

ஹே மருத் தேவதைகளே ! பரிசுத்தமான உங்களுக்குச் சுத்தமான ஹவிஸ்ஸை சேர்ப்பிக்கிறேன். மேலும் சுத்தமான மருத்தேவதைகளின் பொருட்டு ஹிம்ஸை இல்லாத சுத்தமான இந்த கர்மாவைச் செய்கிறேன். யாகத்தில் சம்பந்தப்பட்ட மருத்தேவதைகள் யாகத்தினுல் உண்மையான பலன் யஜமானனை அடையச் செய்கிறுர்கள். அந்த மருத் தேவதைகள் சுத்தமான பிறப்பை உடையவர்கள். நடத்தையாலும் சுத்தமானவர்கள். மற்றவர்களையும் சுத்தமாக்குபவர்கள்.

देवस्यत्वा सवितुः प्रसवे अश्विनोर्बाहुभ्यां पूष्णोहस्ताभ्यामाददे।

எல்லோருக்கும் ப்ரேரகனுன ஸவிதாவினுடைய அநுக்ஞையை பெற்று அச்வினி தேவர்கள், ஸூரியன் இவர்களுடைய கைகளால் (தன்கைகளை அவ்வாறு பாவித்துக் கொண்டு) வஸ்திரத்தை எடுத்துக் கொள்கிறேன்.

अवधूतꣳरक्षोवधूता अरातयः।

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ராக்ஷஸன் விரட்டப்பட்டான் சத்ருக்கள் விரட்டப்பட்டனர் (வஸ்திரத்தை உதரவும்.)

उदुस्त्यंजातवेदसं देवंवहन्ति केतवः। दृशेविश्वाय सूर्यम्।

உலகில் உண்டான ப்ராணிகளை அறிந்தவரும், தேவருமான அப்படிப்பட்ட ஸூரியனை ஆயிரக் கணக்கான கிரணங்கள் உலகத்தை பார்ப்பதற்காக வெளிப்படுத்துகின்றன.

आवहन्ती वितन्वाना। कुर्वाणाचीरमात्मनः।

वासाꣳसिममगावश्च। अन्नपानेचसर्वदा।

ஹே பரமேச்வரனே! வஸ்திரங்கள், பசுக்கள், அன்ன பானங்கள் இவைகளை எல்லாவற்றையும் எப்பொழுதும் எனக்கு உண்டு பண்ணிக் கொண்டு மேலும் அவை எல்லாவற்றையும் விருத்தி செய்து கொண்டு எனக்கு வெகு காலம் இருக்கும்படி செய்வாயாக.

सद्योजातं प्रपद्यामि सद्योजाताय वै नमो नमः।

भवे भवे नाति भवे भवस्वमाम्। भवोद्भवाय नमः॥

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஸத்யோஜாதம் என்று பெயருடைய பரமேச்வரனுடைய மேற்கு முகத்தை அடைந்து அவரை நமஸ்கரிக்கிறேன். ஹே ஸத்யோஜாத மூர்த்தியே ! அந்தந்த ஜன்மாவிற்குக் காரணமாக என்னைத் தூண்டி விடாதே. ஆனால் ஜனன மரணத்தைக் கடந்து இருக்கும்படி தத்வஞானத்தை அடைய தூண்டிவிட்டு ஸம்ஸார ஸாகரத்திலிருந்து கடைத்தேரி வைக்கும் ஸத்யோஜாதமூர்த்திக்கு நமஸ்காரம்.

वामदेवाय नमो ज्येष्ठाय नमः श्रेष्ठाय नमो रुद्राय नमः कालाय नमः कलविकरणाय नमो बलविकरणाय नमो बलाय नमो बलप्रमथनाय नमस्सर्वभूतदमनाय नमो मनोन्मनाय नमः ॥

அழகாகப் ப்ரகாசிக்கின்ற வடக்கு நோக்கிய பரமேச்வரனுடைய முகத்திற்கு நமஸ்காரம், உலகம் உற்பத்திற்கு முன்பு இருப்பதினால் எல்லோருக்கும் மூத்தவரான வடக்கு நோக்கிய சிவபெருமானுக்கு நமஸ்காரம். பிரளய காலத்தில் அழுவதற்கு காரணமாக இருக்கிற ருத்ரனுக்கு நமஸ்காரம். எல்லாப் பிராணிகளுடைய ஆயுளை அழிக்கக்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

காரணமாக இருக்கிற கால மூர்த்திக்கு நமஸ்காரம். சுகத்தை கொடுக்கக்கூடியவரும், பலவிதமான உலகத்தை உண்டு பண்ணுபவருக்கு நமஸ்காரம். ராக்ஷஸர்களுடைய பலத்தை அழித்தவருக்கு நமஸ்காரம். எல்லோரைக்காட்டிலும் பலவானாக இருப்பவருக்கு நமஸ்காரம். தன் இஷ்டம்போல் எல்லோருடைய சக்தியை தன்னிடத்தில் ஒடுக்கிக் கொள்பவருக்கு நமஸ்காரம். எல்லாப் பிராணி களையும் ரக்ஷிப்பவருக்கு நமஸ்காரம். எல்லாம் தெரிந்தவர்களுக்குள் சிறந்தவராக இருப்பவருக்கு நமஸ்காரம்.

अघोरेभ्योऽथ घोरेभ्यो घोरघोरतरेभ्यः।
सर्वेभ्यस्सर्व शर्वेभ्यो नमस्ते अस्तु रुद्ररूपेभ्यः॥

அகோரம் என்று பெயருள்ள தெற்கு நோக்கிய முகத்தை உடைய சிவபெருமானுடைய ஸாத்விக மான வடிவங்களுக்கு நமஸ்காரம், மற்றும் ரஜோ குணத்தினால் கோரமான வடிவங்களுக்கு நமஸ் காரம், மேலும் தாமஸ குணத்தினால் மிகவும் கொடூரமாக இருக்கின்ற வடிவங்களுக்கு நமஸ் காரம். ஹே பரமேச்வரனே ! உன்னுடைய மூன்று விதமான வடிவங்களுக்கும், மேலும் ப்ரளய

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

காலத்தில் ஹிம்ஸிக்கக்கூடிய வடிவங்களுக்கும் எல்லா தேச காலங்களிலும் நமஸ்காரம்.

तत्पुरुषाय विद्महे महादेवाय धीमहि।

तन्नो रुद्रः प्रचोदयात्।

சிவபெருமான் தத்புருஷன் என்று பெயருடைய கிழக்கு நோக்கிய முகத்தை உடையவரை நாங்கள் (சாஸ்திர வாயிலாக) அறிகிறோம். அவ்வாறு அறிந்து, தேவர்களுக்குத் தேவரான சிவபெருமானைத் தியானம் செய்கிறோம். ஆகையால் ருத்ரதேவர் நம்மைத் த்யானம் செய்யவும் ஞானத்தை அடையவும் தூண்டி விடட்டும்.

ईशानस्सर्वविद्यानामीश्वरस्सर्वभूतानां ब्रह्माधिपति

ब्रह्मणोऽधिपतिर्ब्रह्मा शिवोमे अस्तु सदाशिवोम्॥

மேல் நோக்கிய முகத்தை உடைய சிவ பெருமான் ஈசானன் என்று கூறப்படுகிறார். அவர் எல்லா வித்தைகளுக்கும் அதிபதி. எல்லாப் பிராணி களுக்கும் தலைவர். வேதத்தைச் சிறந்த முறையில் காப்பாற்றுபவர். ஹிரண்யகர்ப ப்ரஹ்மாவுக்கும் பெரியவர். எங்கும் வியாபித்த பரமாத்ம ஸ்வரூபம் என்னை அனுக்ரஹம் செய்ய சாந்தமாக இருக்கட்டும், ஹே சதாசிவரே ஓம் காரமாக நான் இருக்கிறேன்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

मानस्तोके तनये मान आयुषि मानो गोषु मानो अश्वेषुरीरिषः।
वीरान्मानो रुद्र भामितोवधीर् हविष्मन्तो नमसा विधेम ते।

ஹே ருத்ர-எங்களுடைய குழந்தைகள் விஷயத்தில், முக்கியமாக புத்ரன் விஷயத்தில், ஹிம்ஸை செய்யாதே எங்களுடைய ஆயுள் சம்பந்தமான விஷயத்தில் ஹிம்ஸை செய்யாதே. எங்களைச் சார்ந்த பசு விஷயத்தில் ஹிம்ஸை வேண்டாம். எங்களுடைய குதிரைகள் விஷயத்தில் ஹிம்ஸை வேண்டாம். கோபம் அடைந்த நீர், எங்களுடைய வேலைக்காரர்களை ஹிம்ஸிக்காதே. நாங்கள் ஹவிஸ்ஸோடு கூடியவர்களாக இருந்து கொண்டு உங்களுக்கு நமஸ்காரம் மூலம் உபசாரம் செய்கிறோம்.

त्र्यम्बकं यजामहे सुगन्धिं पुष्टिवर्धनम्।
ऊर्वारुकमिव बन्धनान्मृत्योर्मुक्षीय माऽमृतात्॥

நல்ல வாசனையை உடையவரும், சரீரம், தனம் இவைகளை விருத்தி செய்யக் கூடியவருமான, முக்கண்ணனாக பரமேச்வரனைப் பூஜிக்கிறோம். உலகத்தில் எவ்வாறு வெள்ளரி பழங்கள் பழுத்த

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வுடன் கட்டிலிருந்து தானுகவே விடுபட்டுவிடு கின்றனவோ, அதுபோல் பரமேச்வர பிரசாதத்தால் ம்ருத்யுவிடமிருந்து விடுபட்டவனுக ஆக வேண்டும். சிரஞ்ஜீவி தன்மையிலிருந்து விடுபடக் கூடாது.

त्र्यायुषं जमदग्नेः कश्यपस्य त्र्यायुषं।

यद्देवानां त्र्यायुषं तन्मे अस्तु त्र्यायुषम्॥

ஜமதக்னி, கச்யபர், தேவர்கள் இவர்களுக்கு கௌமாரம் யௌவனம் வார்தக்யம் என்ற மூன்று பருவங்கள் எவ்வாறு அமைந்துள்ளதோ அந்த மூன்று பருவங்களும் அவ்வாறே எனக்கும் இருக்கட்டும்.

தூர்வா, ம்ருத்திகா ஸூக்தங்கள்

ப்ராத ஸ்நானத்தை தேஹத்திற்காக மாத்திரமில் லாமல், ஆத்மார்த்தமானதாக ஆக்கிக் கொடுக்கும் போது முதலில் அருகம்புல்லையும், கொஞ்சம் சுத்தமான ம்ருத்திகையும் (மண்ணையும்) தலையில் வைத்துக் கொள்ள வேண்டும் அருகம்புல் ஈச்வர சக்தியின் ஒரு அம்சம் என்று நினைத்துக் கொண்டு, தூர்வா ஸூக்தத்தை சொல்ல வேண்டும். பிறகு ம்ருத்திகா ஸூக்தத்தையும் சொல்ல வேண்டும். மண்ணை ஸாக்ஷாத் நாராயணபத்நியான பூமிபிராட்டி யாக நினைத்துக் கொள்ள வேண்டும். இவ்விஷயத்தை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

காஞ்சி பெரியவாள் விவரித்திருக்கிருர்கள்.

பிறகு இரண்டு ஆசமனம் செய்து ஸங்கல்பம் ஆரம்பிக்க வேண்டும். இந்த ஸூக்தங்கள் மாத்யாஹ்ன ஸ்நானத்திற்கு விதிக்கப்பட்டிருக்கிறது. காலே-மாலே ஸ்நானங்களில் இல்லே.

दूर्वासूक्तम्

सहस्रपरमा देवी शतमूला शताङ्कुरा। सर्वꣳहरतु मे पापं दूर्वा दुस्स्वप्ननाशनी। काण्डात्काण्डात् प्ररोहन्ती परुषः परुषः परि॥

एवानो दूर्वे प्रतनु सहस्रेण शतेन च । या शतेन प्रतनोषि सहस्रेण विरोहसि। तस्यास्ते देवीष्टके विधेम हविषा वयम्। अश्वक्रान्ते रथक्रान्ते विष्णुक्रान्ते वसुन्धरा। शिरसा धारयिष्यामि रक्षस्व मा पदे पदे।

தூர்வா என்கிற அருகம்புல்லே நோக்கி சொல்ல வேண்டிய மந்திரம். அருகம்புல்லுக்கு அபிமானி தேவதை தூர்வாதேவி. இந்த அருகம்புல் ஆயிரக் கணக்கான சுத்தி செய்யவல்ல த்ரவ்யங்களே விட சிறந்தது. பளபளவென்று பிரகாசமானது. நூற்றுக்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கணக்கான வேர்களேயும் முளேகளேயும் உடையது. கெட்ட ஸ்வப்னத்தின் பலன்களே அழிக்கவல்லது. அப்படிப்பட்ட தூர்வாபிமானி தேவதை, எனது எல்லா பாபங்களேயும் போக்கடிக்கட்டும்.

ஹே தூர்வையே! பாபத்தை போக்குபவளே! ஒவ்வொரு வேரிலிருந்தும், கணுவிலிருந்தும் முளேக்கும் தூர்வையே (அருகம்புல்) புத்திராதிகளால் எல்லோரிலும் சிறந்தவனுக ஆகும்படி என்னே விஸ்தரிப்பாயாக. ஹே தூர்வையே! பக்தர்களால் துதிக்கப்படுபவள் நீ, நூற்றுக்கணக்காக முளேக்கிருய். அப்படிப்பட்ட தேவியே உனக்கு ஹவிஸ் அளிப்பதன் மூலம் ஸேவை செய்கிறோம்.

अश्वक्रान्त சயனத்தில் பாத்திரம் தயாரிக்கும் பொருட்டு மண் கொண்டு வர வேண்டும். மண் எடுக்கும் இடத்தை குதிரை சுற்றி வர வேண்டும். அந்த பூமி சுத்தமானது. அது போலவே, ரதம் சென்ற பாதை சுத்தமானது. விஷ்ணுவினுல் த்ரிவிக்ரமாவதாரத்தில் பூமி அளக்கப்பட்டது. அப்படிப்பட்ட சுத்தமான பூமியே! செல்வத்தின் இருப்பிடமே! உன்னே ஸ்நானம் செய்யும் பொழுது எனது சிரஸ்ஸால் தரிக்கிறேன். என்னே அடிதோறும் ரக்ஷிப்பாயாக.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

॥ मृत्तिकासूक्तम् ॥

भूमि र्धेनुर्धरणी लोकधारिणी। उद्धृताऽसि वराहेण कृष्णेन शत बाहुना। मृत्तिके हनमे पापं यन्मया दुष्कृतं कृतम्। मृत्तिके ब्रह्मदत्ताऽसि काश्यपेनाभियन्त्रिता। मृत्तिके देहि मे पुष्टिं त्वयिसर्वं प्रतिष्ठितम्॥

मृत्तिके प्रतिष्ठते सर्वन्तन्मे निर्णुद मृत्तिके। तया हतेन पापेन गच्छामि परमां गतिम्।

ஹே ம்ருத்திகையே! ப்ரளயத்தில் ஜலத்தில் லயித்த நீ, நூற்றுக்கணக்கான கைகள் கொண்ட வராஹ அவதாரத்தினுல், ஜலத்திலிருந்து மேலே கொண்டு வரப்பட்டாய் ! கறவை பசு போல் எல்லோரையும் சந்தோஷப்படுத்துகிருய் ! பயிர்களை சுமக்கிருய். ப்ராணிகளையும் சுமக்கிருய்.

ஹே சிறந்த ம்ருத்திகையே! நான் செய்த பாபங்களை அழிப்பாயாக ! நீ பரமாத்மாவால் ஸ்ருஷ்டிக்கப்பட்டவள். காச்யபர் என்ற முனிவரால் அபிமந்த்ரணம் செய்யப்பட்டவள்.

Sri Vedachalam Sastri Collection, Karajkudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஹே ம்ருத்திகையே ! உன்னிடத்தில் ஜலம் முதலியவை ப்ரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன. ஆகையால் நீ, எனக்கு புஷ்டியை கொடுப்பாயாக. எல்லா ப்ராணிகளுக்கும் இருப்பிடமான நீ, எனது எல்லா பாபங்களையும் அழிப்பாயாக. அவ்வாறு எனது பாபங்கள் அழிக்கப்பட்டால் நான் மேலான கதியை (மோக்ஷத்தை) அடைவேன்.

---- சுபம் ---

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi